©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 43] CHENNAI, WEDNESDAY, OCTOBER 21, 2020
Aippasi 5, Saarvari, Thiruvalluvar Aandu–2051

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| HEALTH AND FAMILY WELFARE DEPARTMENT | |
| Tamil Nadu Nurses and Midwives Act.—Making of certain provisions for Registration of Transgender Category in the Tamil Nadu Nurses and Midwives Council to Amend the rules. | |
| Amendment to Notification .. .. .. | 692 |
| HOME DEPARTMENT | |
| Family Courts Act.— Appointment on Transfer of Certain Official Posted as Judge of the Family Court in Certain District .. .. | 693 |
| தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | |
| Industrial Tribunal for Adjudication .. .. | 693 |
| Labour Courts for Adjudication .. .. | 693-698 |
| பிழைத் திருத்தம் .. .. .. .. | 698 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

HEALTH AND FAMILY WELFARE DEPARTMENT

**Making of certain provisions for Registration of Transgender Category in the Tamil Nadu Nurses and Midwives Council to Amend the Rules under the Tamil Nadu Nurses and Midwives Act.**

**Amendment to Notification**

*[G.O.Ms.No. 293, Health and Family Welfare (Z1), 5th August 2020, Aadi 21, Saarvari, Thiruvalluvar Aandu-2051.]*

No.II(2)/HFW/687/2020.—In exercise of the powers conferred under sub-section (2) of Section 11 of the Tamil Nadu Nurses and Midwives Act, 1926 (Tamil Nadu Act III of 1926), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Rules framed under the Tamil Nadu Nurses and Midwives, Act, 1926 (Tamil Nadu Act III of 1926), the draft of the same having been previously published as required by sub-section (1) of Section 11 of the said Act.

AMENDMENT

In the said Rules,

(1) in rule 32, after the expression “Section I or II”, the expression “Section I,II,III or IV” shall be inserted;

(2) in rule 32-A, for the expression, “Section I or II”, the expression “Section I,II,III or IV” shall be inserted;

(3) in Appendix B, in Form IV-A, under the heading “Instructions for filing in form”, in item (4), after the Sub-heading “Section II” and the entries relating thereto, the following Sub-headings and the entries relating thereto, shall, respectively be added, namely:-

SECTION III

The names of Nurses who were not first registered with another State in India and shall be divided into the following five Parts, namely:-

Part A – General Nursing (Transgender Women Nurses)

Part B – General Nursing (Transgender Men Nurses)

Part C – Midwives (Transgender)

Part D – Health Visitors (Transgender)

Part E – Auxiliary Nurse-Midwives (Transgender)

SECTION IV

The names of Nurses who were not first registered with another State in India and shall be divided into the following five Parts, namely:-

Part A – General Nursing (Transgender Women Nurses)

Part B – General Nursing (Transgender Men Nurses)

Part C – Midwives (Transgender)

Part D – Health Visitors (Transgender)

Part E – Auxiliary Nurse-Midwives (Transgender)”.

**அறிவிக்கை**

*[G.O.Ms.No. 293, Health and Family Welfare (Z1), 5th August 2020, Aadi 21, Saarvari, Thiruvalluvar Aandu-2051.]*

தமிழ்நாடு 1926-ஆம் ஆண்டு செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் III/1926) 11-ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (2)இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1926-ஆம் ஆண்டு செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளர் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் III/1926) இயற்றப்பட்ட விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 11-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) விதி 32–இல், பிரிவு I அல்லது II" என்ற சொற்றொடருக்காக, "பிரிவு I, II, III, அல்லது IV’’ என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(2) விதி 32A–இல், பிரிவு I அல்லது II" என்ற சொற்றொடருக்காக, "பிரிவு I, II, III" அல்லது IV, என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(3) பிற்சேர்க்கை B–இன், படிவம் IV A-இல், "படிவத்தை நிரப்புவதற்கான அறிவுரைகள்" என்ற தலைப்பின் கீழ், இனம் (4) –இல், துணை தலைப்பு ‘‘பிரிவு II" மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பின்னர், பின்வரும் துணை தலைப்புகள் மற்றும் அது தொடர்பான பதிவுகள், முறையே, சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அவையாவன;–

‘‘**பிரிவு** III

இந்தியாவில் உள்ள மற்றொரு மாநிலத்தில் முதலில் பதிவு செய்யாத செவிலியர்களின் பெயர்கள், கீழ்க்காணும் ஐந்து பகுதிகளாக பிரிக்கப்பட வேண்டும். அவையாவன;–

பகுதி A – பொது செவிலியர் (மூன்றாம் பாலின பெண் செவிலியர்கள்)

பகுதி B – பொது செவிலியர் (மூன்றாம் பாலின ஆண் செவிலியர்கள்)

பகுதி C – பேறுகால உதவியாளர் (மூன்றாம் பாலினத்தவர்)

பகுதி D – சுகாதார பார்வையாளர்கள் (மூன்றாம் பாலினத்தவர்)

பகுதி E – துணை செவிலியர்–பேறுகால உதவியாளர்கள் (மூன்றாம் பாலினத்தவர்)

**பிரிவு** IV

இந்தியாவில் உள்ள மற்றொரு மாநிலத்தில் முதலில் பதிவு செய்த செவிலியர்களின் பெயர்கள், கீழ்க்காணும் ஐந்து பகுதிகளாக பிரிக்கப்பட வேண்டும். அவையாவன;–

பகுதி A – பொது செவிலியர் (மூன்றாம் பாலின பெண் செவிலியர்கள்)

பகுதி B – பொது செவிலியர் (மூன்றாம் பாலின ஆண் செவிலியர்கள்)

பகுதி C – பேறுகால உதவியாளர்கள் (மூன்றாம் பாலினத்தவர்)

பகுதி D – சுகாதார பார்வையாளர்கள் (மூன்றாம் பாலினத்தவர்)

பகுதி E – துணை செவிலியர்–பேறுகால உதவியாளர்கள் (மூன்றாம் பாலினத்தவர்)

**ஜெ. ராதாகிருஷ்ணன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

HOME DEPARTMENT

**Appointment on Transfer of certain Official Posted as Judge of the Family Court in Certain District under the Family Courts Act.**

*[G.O. (D). No. 1172, Home (Courts-II), 8th October 2020, புரட்டாசி 22, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு-2051.]*

No.II(2)/HO/688/2020.—In exercise of the powers conferred under sub-section (1) of Section 4 of the Family Courts Act, 1984 (Central Act 66 of 1984) the Governor of Tamil Nadu with the concurrence of the High Court, Chennai hereby makes the following appointment on transfer.

| *Sl. No.* | *Name and Designation Thiru / Tmt/ Selvi* | *Ordered to be posted as* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | P. Srikumar<br>Principal Sub Judge, Coimbatore. | Additional Principal Judge, Family Court, Coimbatore in the existing vacancy. |
| 2 | A. Packia Jothi,<br>IV Assistant Judge, City Civil Court, Chennai | IV Additional Principal Judge, Family Court, Chennai in the existing vacancy. |
| 3 | V.S. Kumaresan,<br>Principal Sub Judge, Tirunelveli | Judge, Family Court, Tirunelveli, in the existing vacancy. |
| 4 | M.A. Kabeer,<br>Chief Judicial Magistrate, Kancheepuram @ Chengalpattu | VII Additional Principal Judge, Family Court, Chennai in the existing vacancy. |
| 5 | E. Bakthavachalu,<br>Special Sub Judge, Special Sub Court to deal with LAOP cases, Vellore | Judge, Family Court, Vellore vice Tmt V.R. Latha, transferred. |

S.K. PRABAKAR,
*Additional Chief Secretary to Government.*

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை**

**Disputes between Workmen and Managements referred to Industrial Tribunal for Adjudication.**

**சொடேசியா இந்தியா பிரைவேட் லிமிடெட்**

*[அரசாணை (ப) எண் 468, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 25 செப்டம்பர் 2020, புரட்டாசி 9, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு-2051.]*

No.II(2)/LE/689/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, மதுராந்தகம் வட்டம், தபால்மேடு கிராமத்தில் இயங்கி வரும் சொடேசியா இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் சொடேசியா இந்தியா தொழிலாளர் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறில், கோரிக்கை எண்கள் 1, 2 மற்றும் 5 ஆகியவற்றை, சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு சென்னை தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**(1) கோரிக்கை எண்.1**

தொழிற்சாலையில் நடைமுறையில் இருந்து வந்த LPS-A Line, LPS-B Line, LPS-C Line & HPS Line-–ல் ஆப்பரேட்டர் தொழிலாளர்களுக்கு உதவி தொழிலாளர்களை உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(2) கோரிக்கை எண்.2**

தொழிலாளர்களை சூட் வைத்து வேலை செய்ய வேண்டும் என்று நிர்வாகம் கட்டாயப்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு கட்டாயப்படுத்துவதை சட்டவிரோதமானது என்று அறிவிக்க வேண்டும் என்றும் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(3) கோரிக்கை எண்.5**

தொழிற்சங்கத்தின் பங்களிப்பு இல்லாமல் நிர்வாகம் Engineering Study செய்யக் கூடாது என்றும் அவ்வாறான நிர்வாகத்தின் தன்னிச்சையான Engineering Study தொழிலாளர்களை கட்டுப்படுத்தாது என அறிவிக்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication.**

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி.**

*[அரசாணை (டி) எண் 453, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 23 செப்டம்பர் 2020, புரட்டாசி 7, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/690/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி என்ற நிர்வாகத்திற்கும் பொதுச்செயலாளர், நெல்லை, சிதம்பரனார், குமரி மாவட்ட அரசு போக்குவரத்து எம்ப்ளாயீஸ் யூனியன் (JDLF), திருநெல்வேலி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை, தொழிலாளர் நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. E. முத்துவிஜயன் (நடத்துனர் பணி எண். 9312) என்பவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயனுடன் இரண்டு வருடத்திற்கு நிறுத்தி வைத்து நிர்வாகம் வழங்கிய 08-07-2011 நாளிட்ட தண்டனை உத்தரவை ரத்து செய்தும் மற்றும் அவர் தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த நாட்களை பணி நாட்களாக வரைமுறை படுத்த வேண்டும் எனக் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 454, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 23 செப்டம்பர் 2020, புரட்டாசி 7, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/691/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி என்ற நிர்வாகத்திற்கும் பொதுச்செயலாளர், நெல்லை, சிதம்பரனார், குமரி மாவட்ட அரசு போக்குவரத்து எம்ப்ளாயீஸ் யூனியன் (JDLF), திருநெல்வேலி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற் தகராறை, தொழிலாளர் நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்ற தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. M. கேசவபிள்ளை (பணி எண். 8306) ஓட்டுநருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயனின்றி ஒரு வருடத்திற்கு நிறுத்தி வைத்து நிர்வாகம் வழங்கிய 16-10-2017 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்து, அவரின் தற்காலிக வேலை நீக்க நாட்களை பணி நாட்களாக வரன்முறைப்படுத்த வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 464, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 25 செப்டம்பர் 2020, புரட்டாசி 9, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/692/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி என்ற நிர்வாகத்திற்கும் நெல்லை மாவட்ட போக்குவரத்து தொழிலாளர் சங்கம், திருநெல்வேலி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. M. சங்கரலிங்கம் (பணி எண். 7892) ஓட்டுனருக்கு அவரது வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயனுடன் இரண்டு வருடத்திற்கு நிறுத்தி வைத்து நிர்வாகம் வழங்கிய 24-08-2011 நாளிட்ட உத்தரவை ரத்து செய்யவும், தற்காலிக வேலைநீக்கத்திலிருந்த 15 நாட்களை பணி நாட்களாக வரன்முறைப்படுத்தி உத்தரவிட வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம்) லிமிட்டெட், காரைக்குடி.**

*[அரசாணை (டி) எண் 463, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 25 செப்டம்பர் 2020, புரட்டாசி 9, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/693/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம்) லிமிட்டெட், காரைக்குடி என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் பொது நல அமைப்புச் சங்கம், சிவகங்கை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை, தொழிலாளர் நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, மதுரை தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு மதுரை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. கே.ஜி. ஆத்மநாதன், (பணி எண். 07டிஆர்3323) ஓட்டுனரின் வருடாந்திர ஊதிய உயர்வை நான்கு வருட காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தி வைத்து நிர்வாகம் பிறப்பித்த 14-05-2009 நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற

தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 465, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 25 செப்டம்பர் 2020, புரட்டாசி 9, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/694/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், காரைக்குடி என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர் சங்கம் (சி.ஐ.டி.யு), காரைக்குடி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை, நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, மதுரை தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு மதுரை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. எஸ். ராஜா (பணி எண் 90டிஆர்3047) ஒட்டுநரின் ஆண்டு ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் ஐந்து வருட காலத்திற்கு மட்டும் நிறுத்தி வைத்து நிர்வாகம் வழங்கிய 17–02–2014 நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**சோமாக்ஸ் சன்மார் லிமிடெட், விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம்**

*[அரசாணை (டி) எண் 470, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 25 செப்டம்பர் 2020, புரட்டாசி 9, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/695/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, சோமாக்ஸ் சன்மார் லிமிடெட், விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம் என்ற நிர்வாகத்திற்கும், சோமாக்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன், விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை, நீதிமன்றத் தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. T. ஆறுமுகம் என்பவருக்கு 01-04-2015 ஆம் ஆண்டு வருடாந்திர ஊதிய உயர்வு தொகை ரூ.420/–, 01-04-2015 ஆம் ஆண்டு வருட கணக்குப்படி, ஐந்து வருட சீனியர் ஊதிய உயர்வு தொகை ரூ.10/–, 01-04-2017 ஆம் ஆண்டு ஊதிய உயர்வு தொகை ரூ.420/–, 2017 ஆம் ஆண்டு வருடாந்திர தொகை ரூ.25/– மற்றும் 01-04-2018 ஆம் ஆண்டு ஊதிய உயர்வு தொகை ரூ.420/– என மொத்தம் ரூ. 1295/–ஐ தொழிலாளியின் அடிப்படை ஊதியத்தில் நிர்வாகம் எந்தவொரு முன்னறிவிப்பும் வழங்காமல் பிடித்தம் செய்த தொகையை திரும்ப வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (ப) எண் 492, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 3 அக்டோபர் 2020, புரட்டாசி 17, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/696/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, சோமாக்ஸ் சன்மார் லிமிடெட், விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம் என்ற நிர்வாகத்திற்கும், சோமாக்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன், விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை, நீதிமன்றத் தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. A. பால்சாமி என்பவருக்கு 05-02-2005 முதல் 20-10-2015 வரை Deputy Engineer பதவிக்குரிய 11 ஆண்டு கால நிலுவை ஊதியத்தை வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் மண்டலம்.**

*[அரசாணை (டி) எண் 471, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 26 செப்டம்பர் 2020, புரட்டாசி 10, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/697/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும், தமிழக அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம், நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை, தொழிலாளர் நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)**(c) பிரிவிலும், **10(1)**(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. எஸ். ஜார்ஜ் நடத்துநரின் (பணி எண். 3909) ஊதிய உயர்வினை வருங்காலம் பாதிக்கும் வண்ணம் மூன்று வருடத்திற்கு நிறுத்தி வைத்து, அன்னார் தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்த நாட்களை தகுதியுள்ள விடுப்பாக ஒழுங்குபடுத்தி நிர்வாகம் வழங்கிய 27-12-2018 நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

G.K.N. **டிரைவ்லைன் இந்தியா லிமிடெட், ஓரகடம்**

*[அரசாணை (ப) எண் 476, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 29 செப்டம்பர் 2020, புரட்டாசி 13, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு-2051.]*

No.II(2)/LE/698/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, காஞ்சிபுரம் மாவட்டம், ஓரகடம், வேப்பூரில் அமைந்துள்ள G.K.N. டிரைவ்லைன் இந்தியா லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் G.K.N. டிரைவ்லைன் ஒர்க்கர்ஸ் யூனியன் என்ற தொழிற்சங்கத்திற்கும் இடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை, காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)**(c) பிரிவிலும், **10(1)**(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

G.K.N. டிரைவ்லைன் இந்தியா லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கு எதிராக எழுப்பப்பட்ட தொழிற்தாவாக்கள் நிலுவையில் இருந்த நிலையில் தாவா தொடர்புடைய கீழ்க்கண்ட டீம் லீடர்களின் வேலை பளுவினை அதிகரித்தும் பணிதன்மையை மாற்றம் செய்து வரும் நிர்வாகத்தின் செயல் தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 33-க்கு முரணானது என்றும் மேற்படி மாற்றங்களை செய்யக்கூடாது என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்க

| *வரிசை எண்.* | *பெயர்* | *அடையாள எண்.* |
|---|---|---|
| 1 | N.R. Prahu | OE - 0299 |
| 2 | S. Sasikumar | OE - 0301 |
| 3 | R. Gopinath | OE - 0303 |
| 4 | R. Kesavan | OE - 0309 |
| 5 | K. Sundaramoorthi | OE - 0312 |
| 6 | V. Surendar | OE - 0314 |
| 7 | D. Kotteeshwaran | OE - 0315 |
| 8 | K. Vinayagamoorthi | OE - 0316 |
| 9 | M. Govindaraj | OE - 0317 |
| 10 | M. Vinoth | OE - 0318 |
| 11 | T. Yoharaj | OE - 0319 |
| 12 | T.M. Palani | OE - 0323 |
| 13 | S. Saravanan | OE - 0325 |
| 14 | M. Jagadeesvaran | OE - 0326 |
| 15 | K. Parthiban | OE - 0327 |
| 16 | M. Elumalai | OE - 0328 |
| 17 | R. Thirunavukkarasu | OE - 0330 |
| 18 | L Dhasarathan | OE - 0332 |
| 19 | M. Ravichandran | OE - 0335 |
| 20 | M. Anatharaj | OE - 0337 |
| 21 | K. Sathishkumar | OE - 0341 |
| 22 | S.S. Ashok kumar | OE - 0342 |
| 23 | S. Kamalakannan | OE - 0349 |
| 24 | K. Karthick | OE - 0359 |
| 25 | A. Dilli Raj | OE - 0360 |
| 26 | B. Yuvaraj | OE - 0361 |
| 27 | P. Manikandan | OE - 0369 |
| 28 | Arunkumar | OE - 0371 |
| 29 | S. Jaiganesh | OE - 0376 |
| 30 | B. Yasin | OE - 0377 |
| 31 | K. Suresh | OE - 0380 |
| 32 | P. Panneer Selvam | OE - 0381 |
| 33 | B. Eswaran | OE - 0388 |

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், தலைமை அலுவலகம், விழுப்புரம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டல அலுவலகம்.**

*[அரசாணை (ப) எண் 477, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 29 செப்டம்பர் 2020, புரட்டாசி 13, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/699/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (விழுப்புரம்) லிமிடெட், தலைமை அலுவலகம், விழுப்புரம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டல அலுவலகம் ஆகிய நிர்வாகங்களுக்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை, சென்னை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. R. சிவக்குமார், நடத்துநர் (பணி எண்.62782) என்பவருக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலம் என்ற நிர்வாகம் வருடாந்திர ஊதிய உயர்வினை மூன்று வருட காலத்திற்கு நிரந்தரமாக தள்ளி வைத்தும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த நாட்களை தகுதியான விடுப்பாக கருதி வழங்கிய 20-04-2017 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்தும் ஊதிய உயர்வு நிறுத்தப்பட்ட 01-05-2014 முதல் மீண்டும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி.**

*[அரசாணை (டி) எண் 481, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 29 செப்டம்பர் 2020, புரட்டாசி 13, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/700/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி என்ற நிர்வாகத்திற்கும், நெல்லை, சிதம்பரனார், குமரி மாவட்ட அரசு போக்குவரத்து எம்ப்ளாயீஸ் யூனியன், திருநெல்வேலி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை, நீதிமன்றத் தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற்தகராறு, திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. V. ராஜகோபாலகிருஷ்ணன் (பணி எண். 10158) ஓட்டுநருக்கு, வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயனுடன் ஒரு வருடத்திற்கு நிறுத்தி வைத்தும், மேலும் அவர் தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த நாட்களை தகுதி வாய்ந்த விடுப்பாக வரைமுறைப்படுத்தியும், நிர்வாகம் வழங்கிய 23–02–2018 நாளிட்ட உத்தரவினை இரத்து செய்து, தற்காலிக வேலை நாட்களை பணி நாட்களாக வரைமுறைப்படுத்தி சம்பளம் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விருதுநகர் மண்டலம்**

*[அரசாணை (டி) எண் 482, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 29 செப்டம்பர் 2020, புரட்டாசி 13, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/701/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விருதுநகர் மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும் பாரதீய தமிழ்நாடு அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம், திருத்தங்கல் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற் தகராறை, நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு மதுரை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. ஜி. கோவிந்தன், ஓட்டுநருக்கு (பணி எண் DR8959) வருடாந்திர ஊதிய உயர்வு ஐந்து வருடங்கள் அதன் திரண்ட பயன்களுடன் நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய 01-01-2013 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்து, பின்னிட்ட பலன்களை வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**மாநகர போக்குவரத்துக் கழகம், சென்னை**

*[அரசாணை (ப) எண் 487, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 1 அக்டோபர் 2020, புரட்டாசி 15, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/702/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக மாநகர போக்குவரத்துக் கழகம், சென்னை என்ற நிர்வாகத்திற்கும் அரசாங்க போக்குவரத்து ஊழியர் சங்கம், தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. ஜி. சந்திரசேகர், (பணி எண். 4621T) சேமஓட்டுநருக்கு ஆண்டு ஊதிய உயர்வினை மூன்று வருட காலம் தொடர்விளைவுடன் தள்ளி வைத்து நிர்வாகம் வழங்கிய 23-07-2015 நாளிட்ட இறுதி உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (ப) எண் 496, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 6 அக்டோபர் 2020, புரட்டாசி 20, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/703/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக மாநகர போக்குவரத்துக் கழகம், சென்னை என்ற நிர்வாகத்திற்கும் அரசாங்க போக்குவரத்து ஊழியர் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)**(c) பிரிவிலும், **10(1)**(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. மனோகரன் (பணி எண் சி15536) நடத்துநரின் ஆண்டு ஊதிய உயர்வை ஓராண்டிற்கு தொடர்விளைவுடன் தள்ளி வைத்து நிர்வாகம் பிறப்பித்த 13-05-2015 நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**1. நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட், கோவை, 2. உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், கோவை, 3. பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், ஈரோடு மண்டலம், ஈரோடு, 4. உதவி மேலாளர் (பணியாளர் சம்பளப்பட்டியல் நலம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், ஈரோடு மண்டலம், ஈரோடு, 5. கிளை மேலாளர், பவானி கிளை, ஈரோடு மண்டலம், கிளை மேலாளர், கரூர் கிளை, ஈரோடு மண்டலம்.**

*[அரசாணை (டி) எண் 488, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 1 அக்டோபர் 2020, புரட்டாசி 15, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/704/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக 1. நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட், கோவை, 2. உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், கோவை, 3. பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், ஈரோடு மண்டலம், ஈரோடு, 4. உதவி மேலாளர் (பணியாளர் சம்பளப்பட்டியல் நலம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், ஈரோடு மண்டலம், ஈரோடு, 5. கிளை மேலாளர், பவானி கிளை, ஈரோடு மண்டலம், கிளை மேலாளர், கரூர் கிளை, ஈரோடு மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும், செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து தேசிய முற்போக்கு தொழிலாளர்கள் சங்கம், ஈரோடு மண்டலம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை, எழுவினாக்களுடன் திருச்சி தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)**(c) பிரிவிலும், **10(1)**(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாக்களுடன் திருச்சி, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண்.1**

திரு.ஆர். சதீஸ்குமார், ஓட்டுநர் (ப.எண்.சி. 41787) நிர்வாகத்தின் தண்டனை உத்தரவு பா.எண். 752/பி2/பபி1/தஅபோக/கோ/ஈம/17 மூலம் பவானி கிளையிலிருந்து கரூர் கிளைக்கு கட்டாயப் பணியிட மாறுதல் செய்து நிர்வாகம் வழங்கிய 22-04-2017 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம். எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.2**

திரு. ஆர். சதீஸ்குமார், ஓட்டுநர் (ப.எண்.சி. 41787) 1/டி4/233/சட்டம்/தஅபோக/கோ/ஈம/17 மூலம் ரூ.500/–ஐ சம்பளத்தில் பிடித்தம் செய்து நிர்வாகம் வழங்கிய 08-07-2017 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம். எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.3**

திரு. ஆர். சதீஸ்குமார், ஓட்டுநருக்கு (ப.எண்.சி. 41787) பா.எண். 1/டி4/1087/சட்டம்/தநாஅபோக/ஈம/2018 நாள். 14-12-2016 மூலம் பொய்யான குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கி 2016ல் வரவேண்டிய முதல் ஆய்வுபலனை நிறுத்தி வைத்தது சரியல்ல என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம். எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

முகமது நசிமுத்தின்,
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

**சுஸ்பா நுமேட்டிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்**

**பிழைத் திருத்தம்**

*[கடித எண். 12203/அ2/2020–1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, நாள் 30–09–2020]*

26–12–2012–ல் வெளியிடப்பட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியீடு எண் 50, பாகம் II– பிரிவு 2–ன் பக்கம் 768–ல் அரசாணை (டி) எண் 549, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, **3 டிசம்பர் 2012** என பிரசுரம் செய்யப்பட்டுள்ளதை அரசாணை (டி) எண் 549, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, **4 டிசம்பர் 2012** எனத் திருத்தி வாசிக்கவும்

க. கோமளவல்லி,
*அரசு இணைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU